Veerakesari
Page 4
2023.7.29

ஜப்பான் மீண்டெழுவதற்கு உதவிய ஜே.ஆர். ஜயவர்த்தன

இலங்கைக்கு வருகைதந்துள்ள ஜப்பானின் வெளிவிவகார அமைச்சர் ஹொஸிமசா ஹயாஷி இலங்கை தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கை

அதிர்ஷ்டத்தைத் தேடி, பல வியாபாரிகள், சாகச அனுபவத்தைப் பெற விரும்புபவர்கள் மற்றும் சற்றுலாப் பயணிகள் தொன்று தொட்டு இந்தத் தீவுக்கு விஜயம் செய்துவரும் நிலையில், இலங்கைக்கான எனது விஜயம் தொடர்பில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். முக்கியமாக நான்கு ஆண்டுகளில் ஜப்பானிய வெளியுறவு அமைச்சருக்கு இது முதல் பயணமாகவும், தனிப்பட்ட ரீதியில் இந்த அழகிய நாட்டுக்கு விஜயம் செய்வது இதுவே முதல் தடவையாகவும் அமைந்துள்ளது.

இந்த நாட்டில் எட்டாவது உலக அதிசயத்தைக் காண்பதற்கு நான் ஆவலுடன் இருக்கின்ற போதிலும், எனது விஜயத்தின் நோக்கம், ஜப்பானிய அரசாங்கத்தின் சார்பாக, தற்போது பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள இலங்கைக்கு எனது ஆதரவை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. நீண்ட காலமாக நிலைத்திருக்கும் எமது இரு தரப்பு இணைந்த உறவை மேலும் முன்னெடுத்துச் செல்வதற்கு நான் எதிர்பார்க்கின்றேன்.

19ஆம் நூற்றாண்டிலிருந்து இரு நாடுகளுக்குமிடையிலான உறவை அடையாளப்படுத்த முடியும். இந்து சமுத்திரத்தின் கேந்திரப் பகுதியில் அமைந்துள்ள கொழும்பு, நவயுக ஜப்பானை கட்டியெழுப்பிய பல முக்கிய ஜப்பானியப் பிரமுகர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. அவர்களில் கல்விமான்கள்,கொள்கை வகுப்பாளர், எழுத்தாளர் மற்றும் தொழில் முயற்சியாளரான புகுசாவா யுக்கிச்சி மற்றும் எழுத்தாளரான மோரி ஓகாய் ஆகியோரும் அடங்குவர்.

நவீன யுகத்தில் திகழ்ந்தாலும், 1951ஆம் ஆண்டில் இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் முன்னாள் ஜனாதிபதி ஜயவர்தன, சான் பிரான்சிஸ்கோ சமாதானப் பேரவை மாநாட்டில் உயைாற்றியதை ஜப்பானிய மக்கள் என்றும் மறக்க மாட்டார்கள். "புத்த பெருமான் போதித்த வார்க்கியங்களான "கயவர்களை வெறுப்பினாலன்றி, அன்பினால் அரவணைக்க வேண்டும்" என்பதை வெளிப்படுத்தி, உலக நாடுகள் ஜப்பானையும் அரவணைக்க வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார். சர்வதேச சமூகத்துக்கு ஜப்பான் மீண்டு வருவதற்கு இந்த அழைப்பு ஆரம்பப் படியாக அமைந்திருந்தது.

அன்று முதல், ஜப்பான் இலங்கையுடன் நெருக்கமாகப் பணியாற்ற ஆரம்பித்தது. 1983ஆம் ஆண்டில், இரு நாடுகளுக்குமிடையிலான நட்பின் அடையாளமாக கொழும்பில் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையை ஜப்பான் நிர்மாணித்திருந்தது. இந்த நட்புறவின் அன்மைய அடையாளங்களாக, தெற்கு அதிவேக நெடுஞ்சாலை மற்றும் புதிய களனிப் பாலத்தின் நிர்மாணம் போன்றவற்றைக் குறிப்பிட முடியும். இறம்பொடை குகை, மன்னம்பிட்டிய பாலம் மற்றும் கொழும்புத் துறைமுகத்தின் ஜாயா கொள்கலன் பகுதி போன்றவையும் ஜப்பானால் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. இவை அனைத்தும் தற்போது பயன் தரும் பகுதிகளாக அமைந்துள்ளன.

இலங்கையின் கடன் சுமையைக் கவனத்தில் கொண்டு, இந்த உட்கட்டமைப்பு வசதிகளை நிர்மாணிப்பதற்கு வழங்கப்பட்டயென் கடன்கள் அனைத்தும், இலங்கைக்கு சாதகமான வகையில் வழங்கப்பட்டிருந்தன என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். யென் கடன்களுக்கு மேலதிகமாக, பொது நிதி முகாமைத்துவத்துக்காக நிபுணர்களை வழங்கியிருந்தமை, மருந்துப் பொருட்கள், உணவு, உரம், போஷணை, நீர் மற்றும் கழிப்பறை வசதிகள் போன்றவற்றுக்கு நன்கொடை உதவி மற்றும் இதர தொழில் நுட்ப ஆதரவுகள் போன்றவற்றினூடாக சுமார் 100 மில்லியன் டொலர் வரை கடந்த ஆண்டில் வழங்கி, மனித நேய நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க உதவியிருந்தது.

பொருளாதார அபிவிருத்திக்கு அப்பால், இலங்கைவில் தேசிய ஒருமைப்பாடு தொடர்பிலும் ஜப்பான் அதிகளவு அக்கறை கொண்டுள்ளது. இலங்கையில் ஒஷின் நாடகம் தொடர்பான பிரபலத்துக்கு அடுத்ததாக பெருமளவில் அறியப்படும் ஜப்பனியராக யசஷி அகாஷி திகழ்கின்றார் என எண்ணுகின்றேன். இலங்கையில் சமாதானத்தைக் கட்டியெழுப்புவது, மறுசீரமைப்பு மற்றும் மீளநிர்மாணப் பணிகளுக்கு அகாஷி நீண்ட காலமாக ஆதரவளித்திருந்தார். தேசிய ஒருமைப்பாட்டை நோக்கிய தேசத்தின் பயணத்தில் இவர் முக்கிய காரணகர்த்தாவாக அமைந்திருந்தார்.கடந்த ஆண்டில் பல்வேறு திகழ்வுகளினூடாகவும் எமது இரு தரப்பு உறவுகள் மேலும் வலுப்பெற்றிருந்தன. குறிப்பாக ஜப்பானுக்கும் இலங்கைக்குமிடையே இராஜதந்திர உறவுகள் ஆரம்பமாகி 70 வருட பூர்த்தி கொண்டாடப்பட்டிருந்தது. குறிப்பாக, ஜனாதிபதி விக்ரமசிங்க தாம் பொறுப்பேற்ற முதல் வருடத்தினுள், ஜப்பானுக்கு இரு தடவைகள் விஜயம் செய்து, பிரதமர் கிஷிடாவை சந்தித்திருந்தார்.

இலங்கையுடன் இருதரப்பு மற்றும் பலதரப்பு ரீதியில் தொடர்ந்தும் நெருக்கமாக பணியாற்றுவதற்கு ஜப்பானிய அரசாங்கமும் மக்களும் விருப்பத்துடன் உள்ளனர்.

பரஸ்பர ஒன்றிணைவு

இலங்கையில் அண்மையில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடி தொடர்பில் நான் மிகவும் கவலை கொள்கின்றேன். பிரான்ஸ் மற்றும் இந்தியாவுடன் இணைந்த செயற்பாட்டாளராக ஜப்பானும் பணியாற்றி, கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகளில் இலங்கைக்கு உதவி, பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக் கொண்ட பொருளாதார மறுசீரமைப்பு உடன்படிக்கையின் பிரகாரம் அவற்றை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் தலைமையின் கீழ் முன்னெடுக்கப்படும் முயற்சிகளை நாம் மதித்து வரவேற்கின்றோம்.

இலங்கை அரசாங்கம் மற்றும் மக்களின் முயற்சியுடன் கடன் மறுசீரமைப்புப் பணிகள் பூர்த்தியடைந்ததும், இடைநிறுத்தப்பட்டுள்ள செயற்றிட்டங்களை மீள ஆரம்பிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படும்.

பிரகாசமான எதிர்காலத்துக்கான பாதைக்கு ஒளியேற்றல்

எனது சொந்த இடமான யமாகுச்சியில் இரு இலங்கை யாழனைகள் உள்ளன. மிலிந்த மற்றும் நாமலி. இவை அப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் மத்தியில் மிகவும் புகழ் பெற்றுள்ளன. இவை எமது நட்பின் அடையாளங்களாக அமைந்திருப்பதுடன், ஜப்பானுக்கும் இலங்கைக்குமிடையே உறவுகளை வலுப்படுத்த காரணிகளாகவும் உள்ளன. எமது நாடுகளுக்கிடையே இருதரப்பு உறவுகளை மேலும் மேம்படுத்துவதற்கு நான் தொடர்ந்தும் முயற்சியளிப்பேன். இலங்கை அதன் பொருளாதார நெருக்கடியிலிருந்து விரைவில் மீண்டு, அதன் செழுமையான இயற்கைச் சூழல் மற்றும் சனத்தொகையின் முழு ஆற்றலையும் வெளிக் கொண்டு வரும் வகையில் செயலாற்றும் என்பதை நாமும் ஜப்பானியர்களும் எதிர்பார்க்கின்றோம். முன்பை விட பிரகாசமாக 'ஜொலிக்கும் தீவை' காண்பதற்கு நாம் ஆவலுடன் இருப்பதுடன், அந்தப் பயணத்தில் இலங்கைக்கு ஆதரவளிக்க ஜப்பான் தயாராக உள்ளது.

பால்நிலை வன்முறை குறித்து அதிக அக்கறை செலுத்தி வரும் அரசாங்கம்

பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை தொடர்பில் அண்மைய மாதங்களில் இலங்கை அரசாங்கம் அதிக முக்கியத்துவம் வழங்கி வருவதை அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறான வன்முறைகளைத் தடுப்பதற்கான வழிமுறைகள் குறித்து தற்போது மகளிர்,சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு ஆராய்ந்து வருவதோடு நாட்டில் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளைக் குறைக்கும் நோக்கில் பலவேறு நிகழ்ச்சித் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் தற்போது இந்த விடயம் சார்ந்த சட்டங்களை மேம்படுத்துவதற்கும், புதிய சட்டங்களை உருவாக்குவதற்குமான விடயங்களை தற்போது அரசாங்கத்தின் துறை சார்ந்த அமைப்புகள் ஆராய்ந்து வருகின்றன.

அதேபோன்று பால்நிலை அடிப்படையிலான வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை அனுகுவதற்கான திட்டத்தின் அங்குராரர்ப்பண விழா கொழும்பிலுள்ள ஐநா. தலைமையகத்தில் கடந்த மே மாதம் இடம்பெற்றிருந்தது. இலங்கையில் குடும்ப வன்முறை, பாலியல் வன்முறைகளை இல்லாதொழித்து, அது தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தத் திட்டம், ஐந்து வருட காலத்துக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இவ்வாறான மேலும் பல திட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

இலங்கை அரசாங்கமும் சர்வதேச அமைப்புகளும் இந்த வன்முறைகளின் பாரதூரத்தன்மையை உணர்ந்த நிலையில் இந்த விடயத்துக்கு அதிக முக்கியத்துவம் வழங்கி வருகின்றன எனலாம். அல்லது ஐக்கிய நாடுகள் சபை போன்ற சர்வதேச அமைப்புகளின் அழுத்தங்களால் அரசாங்கம் இந்த விடயத்துக்கு முக்கியத்துவம் அளிக்கக் கூடும் எனவும் கொள்ளலாம். எவ்வாறாயினும் இது குறித்து கவனம் செலுத்த வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு உள்ளது.

பால் நிலை அடிப்படையிலான வன்முறை விடயத்தில் இலங்கையின் தற்போதைய நிலை என்ன?

ஐக்கிய நாடுகள் பெண்கள் அமைப்பு இலங்கையின் 25 மாவட்டங்களையும் உள்ளடக்கி மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் இலங்கையில் 2019ஆம் ஆண்டு தனிமைப்படுத்தல் காலப் பகுதிக்கு முன்னதாகவே 5 பெண்களில் ஒருவர் அதாவது 20.4% வீதமான பெண்கள் நெருங்கிய தொடர்பைப் பேணிய நபரால் வன்முறைக்கு உட்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது. இதேவேளை 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 4 பெண்களில் ஒருவர் என்ற அடிப்படையில் 24.9 வீத பெண்கள் வன்முறைக்கு உள்ளாவதாக குறிப்பிட்டுள்ளது. (உலகளாவிய ரீதியில் தனிமைப்படுத்தல் காலப் பகுதியில் வன்முறைகள் அதிகரித்ததாக கண்டறியப்பட்ட நிலையிலேயே இந்த விடயம் குறிப்பாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.)

அத்துடன் பாலியல் வன்முறைக்கு உள்ளான பெண்களில் கிட்டத்தட்ட பாதி (49.3%) பேர் அவமானம் மற்றும் பயம் போன்ற காரணங்களால் எந்த வகையிலும் முறையான உதவியை நாடவில்லை எனவும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

எஸ். ரொஷாந்தினி

15 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய 2,200க்கும் மேற்பட்ட பெண்கள் இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் அங்கீகரிக்கப்பட்ட முறையைப் பயன்படுத்தி இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது தேசிய கணக்கெடுப்பு இது எனவும் அவ்வமைப்பு கட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை 2020 ஆம் ஆண்டில் இரண்டில் ஒரு பெண் அதாவது 39.8 வீதமான பெண்கள் பௌதீக ரீதியான வன்முறை துணையின் துன்புறுத்தலை போன்றவற்றாலும் வன்முறைக்கு உள்ளாவதாக பால்நிலை ரீதியான வன்முறை தொடர்பான சிறுவர், மகளிர் அலுவல்கள் அமைச்சின் வழிகாட்டியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவ்வாறான வன்முறை விடயத்தில் சிறுவர்களுக்கு நேர்ந்த சம்பவங்களை எடுத்துக் கொண்டால், 2022 ஆம் ஆண்டில் 10,497 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது. இவற்றில் அதிகளவாக கொழும்பில் 1708 சம்பவங்களும் கம்பஹாவில் 1027 சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

தமிழ்ப் பிரதேசங்களை நோக்கும் போது மட்டக்களப்பில் 160 சம்பவங்களும் யாழ்ப்பாணத்தில் 166 சம்பவங்களும் திருகோணமலையில் 156 சம்பவங்களும் முல்லைத்தீவில் 104, கிளிநொச்சியில் 87,வவுனியாவில் 81 சம்பவங்களும் பதிவாகியுள்ளன. இதேநேரம் கனிசமான சிங்கள மக்கள் வாழக்கூடிய தமிழ் பிரதேசங்களான பதுளையில் 277 சம்பவங்களும், மாத்தளையில் 239 சம்பவங்களும் நுவரெலியாவில் 195 சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

இவற்றில் 729 முறைப்பாடுகள் பாலியல் துன்புறுத்தல் தொடர்பானவை என்பதோடு 167 சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்பட்டமை காரணமாக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.எனைய குற்றங்கள் தாக்குதல், கடத்தல் மற்றும் அடிமைப்படுத்தல் போன்றவற்றுடன் தொடர்புடையவை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு காட்டில் பால்நிலை ரீதியான வன்முறைகள் சிறுவர்கள் தொடக்கம் வயது வந்தவர்கள் வரை அனைவர் மீதும் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் அவற்றைத் தடுக்க முடியாத நிலை காணப்படுவதால் தற்போது இந்த விடயம் குறித்து அரசாங்கம் அதிக கரிசனை எடுத்து வருகிறது.

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

பொன்மொழிகள்

வெற்றிகளை சந்திக்கவல் இதயம்
பூவைப் போல் மென்மையானது
தோல்வி மட்டுமே சந்திக்தவள் இதயம்
இரும்பை விட வலிமையானது
—சுவாமி விவேகானந்தர்—